மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 6—2—1973-ல்தான் ஒப்புதல் அளிக்கப்பட்டது. சீக்கிரத்தில் முடிவு அடையும் என்று நம்புகிறேன். அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

மணல்மேட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலை.

* 85 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் தாலுக்கா, மணல்மேட்டில் உள்ள கூட்டுறவு நூற்பாலையில் தற்போது வேலை செய்வோர் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) அதன் உற்பத்தித் திறன் எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) 364.

(இ) இந்த ஆலையில் தற்போது நிறுவியுள்ள கதிர்கள் 13,824 இவை முழு அளவில் சாதாரண நிலையில் இயங்கினால் மாதம் 30,213.37 கிலோகிராம் (201 பேல்கள்) நூல் உற்பத்தியை அளிக்கும்.

Incentives for plastic industries

* 86 *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any incentives are given to the plastic industries in this State; and

(*b*) if so, the details thereof for the calendar year 1972?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ): பி.வி.சி. பிசின்கள், இடைப்பட்ட பொருட்கள் ஆகியவற்றைத் தயாரிக்கப் பயன்படுத்துவதற்காக பி.வி.சி. தயாரிப்பாளர்களால் கொள்முதல் செய்யப்படும் வெறியம் கலந்த மதுவிற்குக் காலன் அளவைக் கட்டணங்களைச் செலுத்துவதனின்றும் அரசு விலக்களித்துள்ளது.

திரு. என். டென்னிஸ்: வீட்டில் வைத்து வேலை செய்யும் தன்மை வாய்ந்த பெண்களுக்கு ஊக்கம் அளிக்க ஏதாவது நடவடிக்கை எடுக்கப் படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ப்ளாஸ்டிக் இண்டஸ்ட்ரிக்கு என்ன உதவி அளிக்கப்படுகிறது என்பது கேள்வி. அதற்கு வரிச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது.